**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோயம்புத்தூர்</u>**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் செவ்வாய்கிழமை 20-ம் நாள் இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி) **திரு.இரா.தேவராஜ்,பி.ஏ.,பி.எல்.,** மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தேதி | - | 20.08.2024 |
| அசல் வழக்கு எண் | - | **1058/2016** |
| பெயர் | - | **தமிழ்ச்செல்வி - வா.சா.1** |
| கணவர் பெயர் | - | பழனிச்சாமி |
| வயது | - | 47 |
| பாலினம் | - | பெண் |
| முகவரி | - | |
| தொழில் | - | குடும்ப ஜீவனம் |

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

**1)** கடந்த 21.07.2010 -ல் தாவா சொத்தை பொறுத்து என் தாயார் ராஜேஸ்வரி என் பெயருக்கு ஒரு பிழைத்திருத்தல் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வங்கியிலிருந்து கடன் பெறுவதற்காக வங்கி ஊழியர்கள் கேட்டதால் என் தாயார் எழுதிக்கொடுத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி பிழை திருத்தல் பத்திரம் என்றால் **(மேற்படி பிழைத்திருத்தல் பத்திரத்தின்**

**சான்றிட்ட நகல் பி.சா.ஆ. 1 ஆக குறியிடப்படுகிறது).** பி.சா.ஆ. 1 பிழைதிருத்தல் பத்திரம் குறித்து எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் எனக்க சரியாக தெரியவில்லை. பி.சா.ஆ. 1 ஆவணத்தை நான் முழுமையாக படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. பி.சா.ஆ. 1 பிழைதிருத்தல் ஆவணத்தை நான் வங்கிக் கடன் பெற்ற அனைத்து வங்ககிகளிலும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எந்தெந்த வங்கியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை. ஒரு வங்கியில் தாக்கல் செய்துள்ளதாக என் தாயார் எனக்கு கூறியுள்ளார்.

2) இன்டசின் பேங்க், மக்மா பினான்ஸ், ஐடிஎப்சி பேங்க் ஆகியவற்றில் என் பெயரில் தான் கடன் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வங்கிகளில் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்கள் என் மூலமாகத் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கு, வங்கி மூலமாக கொடுக்கப்பட்டது. பி.சா.ஆ. 3 பிழைத்திருத்தல் பத்திரம் பக்கம் எண். 3 ல் கடைசி மூன்று வரிகளில் **" பின்னும் பக்கம் 6 கடைசி பத்திக்கு முன் மேற்படி சொத்து தற்கால சப்டிவிசன் படி க.ச.219/1Z நெம்பர் காலையில் உள்ளது என்பது விட்டுப்போய் உள்ளது"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து தெரியவில்லை.

3) பி.சா.ஆ. 3 பிழைத்திருத்தல் பத்திரம் பக்கம் எண். 4 -ல் **பின்னும் பக்கம் 6 கடைசி பத்திக்கு முன் மேற்படி சொத்து தற்கால சப்டிவிசன் படி க.ச.219/1Z நெம்பர் காலையில் உள்ளது என்பது விட்டுப்போய் உள்ளது என்பதை சேர்த்து திருத்தி வாசித்துக்கொள்ளும் பொருட்டு இந்த பிழை திருத்தல் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன்"** என்று குறிப்பிடப்பட்டு, அதன் கீழ் என் தாயார் கையொப்பம் செய்துள்ளார் என்றால் என் தாயாருக்கு படிக்கத் தெரியாது, அவரிடம் ஒரு புள்ளி விட்டுப்போய் விட்டதாக கூறி வங்கியில் பிழைத்திருத்தல் பத்திரம் எழுதி

வாங்கிக்கொண்டார்கள். மேற்படி வங்கி பிழைத்திருத்தல் பத்திரம் எழுதிக்கொண்ட விவரம் தெரிந்த பின்னிட்டு அது தொடர்பாக நான் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் தற்போது வரை ஆவணம் என் வசம் ஒப்படைக்கப்படவில்லை. மேற்படி விவரம் குறித்து எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) தாவா சொத்தின் கிழபுறம் மற்றும் வடபுறங்களில் பஞ்சாயத்து ரோடுதான் உள்ளது என்றால் தற்போது உள்ளது. ஆரம்பத்தில் வடபுறத்தில் வீடு இருந்தது. வடபுறத்தில் பஞ்சாயத்து ரோடு அமைக்கப்பட்ட சமயத்தில் நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் இல்லை. எனக்கு பாத்தியப்பட்ட எல்லைக்குள் மேற்படி ரோடு வரவில்லை. தாவா சொத்து ஆதியில் பாத்தியப்பட்ட குப்பண்ண கவுண்டர் வகையறாவிற்கு சர்வே எண். 219/1 -ல் தான் லேஅவுட் அமைத்து மனை நிலங்களாக பிரிக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்துப் பார்த்தேன். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் அவருக்குப் பாத்தியப்பட்டுள்ள சொத்து 219/2 பி காலையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

5) எனக்கு காலை எண். 219/2, 219/2 பி ஆகியவற்றில் எந்தவொரு சொத்தும் இல்லை என்றால் சரிதான். 219/1 -ல் தான் உள்ளது. என்னுடைய தகப்பனார் கந்தசாமி தவறான அளவீடுகளுடன் தாவாச் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மேற்கு புற பகுதியை பிரதிவாதி ஆக்கிரமிக்க முயற்சித்ததாக நான் பொய்யாக இவ்வழக்கைத் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மேற்கு பகுதியை ஆக்கிரமிக்க முயற்சி செய்ததால் தான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி தாவா சொத்தின் மேற்கு புற பகுதி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், நான் தான் மேற்படி பகுதியை ஆக்கிரமிக்க

முயற்சி செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**

என் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தின் கிழபுறத்தில் தென்வடல் ரோடு அமைந்துள்ளது. மேற்படி சொத்தின் கிழமேல் தென்புறம் 80 அடியும், வடக்கில் 76 அடியும் உள்ளது. மேற்படி சொத்து குறித்து தான் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

என் தகப்பனார் பெயரில் கிரையம் ஏற்பட்டுள்ள மேற்படி சொத்திற்கான வருவாய் ஆவணங்களை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவீடுகள் தவறு என்றாலும், தற்போது மேற்படி சொத்திற்கான புலவரைபடம், சிட்டா ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், அவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றாலும் சரியல்ல. கடந்த 44 வருடங்களாக மேற்படி சொத்தைத் தான் அனுபவித்து வருகிறோம். கடந்த 44 வருடங்களாக நான் அனுபவித்து வருவதாக கூறும் சொத்து க.ச.எண். 219/1Z என்றால் சரியல்ல, 219/1 என்று தான் என் தந்தை கிரையப் பத்திரத்தில் உள்ளது.

ஒம்/- இரா.தேவராஜ் பி.ஏ., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட
உரிமையியல் நீதிபதி,
கோயம்புத்தூர்.

Initial
III ADM, Cbe